செய்தி வெளியீட்டு எண்.9 நாள்: **5.1.2010**

**கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் பணியாற்ற தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் பணி நியமன ஆணைகளை வழங்கினார்.**

மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறையின் கட்டுப்பாட்டிலுள்ள, கள்ளர் சீரமைப்புத்துறையின் கீழ், கள்ளர் இன மக்களின் கல்வி மேம்பாட்டிற்காக, மதுரை, திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்டங்களில், மேல்நிலைப்பள்ளிகள் 22, உயர்நிலைப் பள்ளிகள் 23, நடுநிலைப் பள்ளிகள் 28, ஆரம்பப் பள்ளிகள் 187 என மொத்தம் 260 பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன.

இப்பள்ளிகளில், சுமார் 43,000 மாணவ, மாணவிகள், கல்வி பயின்று வருகின்றனர். இம்மாணவ, மாணவிகளுக்கு ஆண்டுதோறும் அரசு, இலவச நோட்டுப்புத்தகங்கள், குறிப்பேடுகள் மற்றும் சிலேட்டுகள் ஆகியவற்றை வழங்கி வருகின்றது. நடப்பாண்டில், இப்பள்ளிகளின் மேம்பாட்டிற்காக ரூ.47 கோடியினையும் அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. இப்பள்ளிகளில் 2008–09 ஆம் கல்வியாண்டில் நடைபெற்ற 10 மற்றும் 12 ஆம் வகுப்புகளுக்கான அரசு பொதுத்தேர்வுகளில், பத்தாம் வகுப்பில் 82.70 % மாணவ, மாணவியர்களும், 12 ஆம் வகுப்பில் 72.30 % மாணவ, மாணவியர்களும் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

கடந்த 2001 ஆம் ஆண்டு முதல் 2005 ஆம் ஆண்டு வரையில், அ.இ.அ.தி.மு.க ஆட்சியில் கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில், 156 ஆசிரியர்கள் மட்டுமே பணி நியமனம் செய்யப்பட்டனர். அதில் 94 ஆசிரியர்கள் தொகுப்பூதியத்தில் நியமனம் செய்யப்பட்டனர்.

தலைவர் கலைஞர் தலைமையிலான கழக ஆட்சி பொறுப்பேற்றவுடன் 2006 ஆம் ஆண்டு முதல் கள்ளர் சீரமைப்பு பள்ளிகளில் 265 ஆசிரியர்கள் புதியதாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மேலும், கடந்த ஆட்சிக் காலத்தில், தொகுப்பூதிய அடிப்படையில் நியமனம் செய்யப்பட்ட 94 ஆசிரியர்களுக்கும் காலமுறை ஊதியம் வழங்கப்பட்டுள்ளது.

தற்போது வேலைவாய்ப்பகம் மூலம் பரிந்துரைக்கப்பட்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட 89 தமிழாசிரியர் மற்றும் இளங்கலைப் பட்டதாரி ஆசிரியர்களுக்கு மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் பணி நியமன ஆணைகளை இன்று (5.1.2010) தலைமைச் செயலகத்தில் வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் அவர்கள், பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் செயலாளர் திரு. து.நா. இராமநாதன், சிறுபான்மையினர் நலத்துறை, மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறையின் ஆணையர் (பொ) திரு.பெ.மு. பஷீர் அஹமது, மாவட்ட வருவாய் அலுவலர் (கள்ளர் சீரமைப்பு) திரு. எஸ்.சோமசுந்தரம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

* * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.